# மூவர் கூட்டணிகள்

## முடக்கப்பட்டது தாம்பரம் RTO


அருள்

சென்னை, தாம்பரம் RTO அலுவலகத்தில் டி.ஆக்டிவேட் ஆன கார்டுகள் காணாமல் போனதற்கு, தாம்பரம் RTO அலுவலகத்தில் முன்பு பணியாற்றி வந்த 'போலி' சங்க தலைவரான ரகு – அவர்களால் பணி நியமிக்கப்பட்ட அருள் என்றவர் பங்கும், தற்போது சங்கரன்கோவில் RTO – PAவாக பணிபுரியும் போக்கு வரத்து துறையின் 'போலி' சங்க தலைவரான PA ரகுவின் பங்கும், பெருமளவில் உள்ளது என்பதால், காவல்துறை மற்றும் துறைரீதியான விசாரணையின் வட்டத்திற் குள்ளும் வர வேண்டியவர்கள் இவர்களும் தான், என பல்வேறு தரப்பில் இருந்தும் கூறிவருகின்றனர்.

எனவே, சம்பந்தப்பட்ட உயர் காவல் அதிகாரி கள், மற்றும் அரசு செயலர்கள், போக்குவரத்து துறையின் அதிரடியான ஆணையர் நிர்மல்ராஜ் IAS அவர்களும், இந்த கட்டுரையினை ஒரு புகாராக ஏற்று சீர்தூக்கி பார்த்திட பணிந்து வேண்டுகிறோம். இந்த பதிவில் நம்மால் சொல்லப்படும் குற்றச் சாட்டுக்கு ஆதாரமாக ரகுவால், அவரது புரோக்கரான அருளுக்கு வழங்கப்பட்ட மேற்கண்ட அடையாள அட்டையினையே ஆதாரமாக பதி விட்டுள்ளோம்.


(பாரீர். அடையாள அட்டையை )

அலுவலக ஆய்வுக்கு வரும் அரசு அதிகாரிகளே, அசரும் அளவுக்கு, அருள்–ன் அடையாள அட்டை போக்குவரத்து துறை சார்ந்த நபர் என்ற எண்ணங்களை உருவாக்குகிற அளவுக்கு கண்களை திசை திருப்பும்.

அதோடு, அதன் வடிவமைப்புகள் ஆய்வுக்கு வரும் அரசு அதிகாரிகளை எல்லாம் அப்புறப்படுத்தி விடும். அந்தளவுக்கு ரகுவால் 'போலி'யாய் தயாரிக்கப்பட்டு, அவரால் கையெப்பம் இட்ட அடையாள அட்டை, ரெய்டுக்கு வரும் உயர் அதிகாரி களையும், மற்றும் விஜிலென்ஸ் போலிசாரையும் அருள் என்ற இந்த தனிநபரையும், அரசு ஊழியர் என்று நினைக்கிற அளவுக்கு இந்த 'போலி' அடையாள அட்டைக்கு ஒரு பிரமிப்பை கொடுத்து அவரை தாம்பரம் அலுவலகத்திற்குள்ளேயே பணிக்கு அமர்த்தியுள்ளார் ரகு.


இதனை ரகு இல்லை என்று மறுக்க முடியாது. அவரது கையெப்பம் இட்டு, அவரது போலி சங்கத்திற்கு நியமிக்கப்பட்டதாக பதிவு செய்து அடையாள அட்டை வழங்கப்பட்டுள்ளது இந்த 'போலி'யான அட்டை. மேலும் இவர் தாம்பரம் அலுவலகத்தில் தான் கடந்த பல வருடங்களாக பணிபுரிந்தும் வந்துள்ளார். இவரும், பாலாஜிக்கும் இடையே எழுந்த சிறு சிறு பிரச்சனைகளால்

ரகுவின் புரோக்கருக்கு வழங்கப்பட்ட போலி ஐ.டி. கார்டு


TAMILNADU
TRANSPORT DEPARTMENT
STAFF ASSOCIATION
IDENTITY CARD

Name : R.ARUL
Deisgnation : TYPIST / CLERK
Office Address : Tamilnadu Transport Department, Staff Association.

Signature of the Holder
Signature of the State President


Date of Birth : 10.03.1972
Blood Group : B+ve
Office Address : No.14/1, Theradi Street, Triplicane, Chennai - 600 005.
Cell : 9042817991



ரகு, P.A. to RTO சங்கரன்கோவில்

வாய்த்தகராறுகளாகி கடந்த இரண்டு மாதமாகத்தான் அலுவலகத்தை விட்டு அருள் வெளியேற்றப்பட்டுள்ளார். ஆனால் அருள் அலுவலகத்திற்கு வந்து செல்வாரே தவிர முன்பு இருந்தது போல் தனியொரு டேபிள், சேர், என அலுவலக பணியாளர் போல் பணியாற்ற பாலாஜியால் அனுமதிக்கப்படவில்லை.

அதே போல் அருள் என்பவருக்கு எந்த சிக்கல்களையும் உருவாக் கிடாமல், ரகுவால் இந்த அடையாள அட்டை தயார் செய்யப்பட்டு ரகு–வின் முறைகேடான பணிக்காக, அருள் தாம்பரம் RTO– ல் பணியமர்த்தப் பட்டுள்ளார் என்பது இதன் மூலம் நிரூபிக்கப்படுகிறது.

மேலும், இவரது போலி சங்கத்திற்கு டைப்பிஸ்ட் / கிளார்க் என குறிப்பிட்டு, அடையாள அட்டையோடு பணியமர்த்தப்பட்ட அருள் என்ற தனி நபருக்கு, தாம்பரம் RTO –ல் என்ன வேலை ? அந்த ID–யில் உள்ள முகவரியில் அமர்ந்து பணி செய்வதுதானே முறை, இவர் எதற்கு தாம்பரம் RTO பணி செய்தார் ?

நடுநிலை பணியாளர்களால் கூறப்படுவது. அருள் என்பவர், ரகு–வின் INFORMER–ஆகவும், அவரது லஞ்ச வசூலுக்கு ஒரு ஏஜெண்டாகவும் இருந்து செயல்பட நியமிக்கப்பட்வர்தான் இந்த அருள் என கூறிவருகின்றனர்.

எனவே குவாரிகளுக்கு மிரட்டல் விடும் கொளப்பாக்கம் விஜயகுமாருடன் நட்பு பாராட்டி செல்லும் ரகு, அருள், ஆகியோர் மூவர் கூட்டணியாக அமைந்து ஒட்டுமொத்த எதிரிகளை பழிதீர்த்துக்கொண்டுள்ளனர். அதாவது தாம்பரம் RTOக்கு எதிரியாக, மிரட்டல் விஜயகுமார் களம் கண்டும், பாலாஜிக்கு எதிரியாக அருள் என்பவரும், PA ரகுவுக்கு எதிரியாக தாம்பரத்தின் PA விஜயகுமார் என பிரகடனபடுத்திய ரகு மும்முனை தாக்குதலில், மூவரையும் காலி செய்ய திட்டம் தீட்டிய செயல்களே மேற்கொண்ட சிலரையும் சேர்த்தே காவு வாங்கிவிட்டது என நமது புலன்விசாரணையில் தெரிய வருகிறது.

அருள் இருக்கும் தாம்பரம் மேல்மாடி அறையில் கொளப்பாக்கம் மிரட்டல் விஜயகுமார்





கு.பா

மேற்கண்ட இந்த செய்தியை அறிந்து கு.ப.–வின் சிறப்பு தலைமையாக கொண்ட போக்குவரத்து துறையின் ஒரிஜினல் சங்கத்தலைவரான STA –ல் PA–வாக உள்ள விஜயகுருசாமி தலைமையில் செயல்படும் சங்கத்தின் சார்பாக ஊடகத்துறையினருக்கு பேட்டி யளித்த கு.பா, RC ஸ்மார்ட் கார்டு காணாமல் போனது குறித்து பேசுகையில் “இது வெளிநபர்களின் ஆதிக்கத்தால் நடந்த சம்பவம்... இது குறித்து சிபிசிஐடி போலிசார் வழக்குபதிந்து விசாரிக்க வேண்டும்” என அரசுக்கு ஒரு கோரிக்கை வைத்துள்ளார்.

மேலும் இது குறித்து முதல்வரையும் நேரில் சந்தித்து கோரிக்கை வைக்க இருப்பதாகவும், அதில் சுமூக தீர்வு எட்டாவிட்டால் மிகப்பெரும் போராட்டத்தை அறிவிக்க இருப்பதாகவும்,

கூட்டம் நடத்தப்பட்ட இடத்தில் ஒரு செய்தியும் எகிறி குதித்து வந்தது.

ஆக, தற்போதைய போக்குவரத்தின் ‘போலி’ சங்க தலைவரான ரகு தயாரித்த ‘போலி’ அடையாள அட்டையும், ரகுவால் மேற்கண்ட அருள்–க்கு வழங்கப்பட்ட இந்த முறைகேடான அடையாள அட்டை குறித்தும் விசாரணைகள் நடத்தப்படும்பட்சத்தில், ரகுவும் வசமாக சிக்குவார் என்று தெரியவருகிறது.


மேலும், சங்கத்தின் டைப்பிஸ்ட், கிளர்க் என்ற ஒரு தகுதியை வழங்கி, தனிநபர் அருள்– ஐ தாம்பரம் RTO – ல்

பணியமர்த்திய ரகு,தனக்கான லஞ்ச தொகையை வரவு வைக்கவும், கமிஷன் பெறவும் மட்டுமே அரசு ஊழியர் அல்லாத அருள் என்ற தனி நபரை முன்னாள் தாம்பரத்தின் P.A.-வான ரகு (தற்போது சங்கரன்கோயில் R.T.O.வின் P.A.-வாக உள்ளார்.) நியமித்துள்ளார் என்பது தெள்ளத் தெளிவாக தெரியவருகிறது என்றாலும் பல்வேறு தரப்பிலும் சில கேள்விகளையும் எழுப்பி வருகின்றனர்.

அதாவது இந்த தனிநபரான அருளுக்கு, கடந்த இரண்டு மாதத்தை மட்டும் தவிர்த்துவிட்டு, கடந்த பல வருடங்களாக அருளுக்கு சம்பளம் வழங்கியது யார்? அதன் கணக்கு விபரங்கள் என்ன? சங்கத்தின் வரவு செலவுகள் என்னென்ன என ஆய்வுக்குட்படுத்தப்படும் பட்சத்தில் ரகு வசமாக சிக்க நேரிடும் என்கின்றனர்.

அதே போல், ரகு – வின் போலி சங்கத்தின் மூலம் ரகு–வால் அருள் நியமிக்கப்பட்டிருப்பதால், சங்க நிர்வாகிகளிடம் ஒப்பதல் பெற்றாரா?

அப்படி ஒப்புதல் பெற்று நியமிக்கப்பட்டிருந்தால், சங்க நிர்வாகிகளோடு கலந்து ஒப்புதலுக்கு கமிட்டியில் வைக்கப் பட்ட தீர்மானத்தில் பதிவு செய்யப் பட்ட அறிவிப்புகள் என்னென்ன?


சிவசங்கரன்


நிர்மல்ராஜ் ஐ.ஏ.எஸ்.

மேலும், அருளுக்கான பணிகளுக்குரிய வரவு – செலவுக்குரிய ஆவணங் களையும ஆய்வு செய்து அற்கான நட வடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு எப்படி சம்பளம் நிர்ணயிக்கப் பட்டது? என்ற கேள்வி யினையும் எழுப்பி வருகின்றனர்

எனவே சங்க கணக்குகளின் வரவுசெலவு கணக்குகளின் ஆவணத்தை யும், போலி சங்கத்தின் மினிட் புஸ்தகத்தையும் உடனே கைப்பற்றி ஆய்வுக்கு எடுக்கப்பட வேண்டும். இல்லையேல், ரகுவால் போர்ஜரி கணக்குகள் காட்டப்பட்டு அவர் தப்பிப்பதற்கான நடவடிக்கைக்கு துரிதப்படுவார் என அறிவிக்கின்றனர் சக பணியாளர்கள்.

எனவே, இதற்கான உரிய ஆய்வுகளை உடனே செய்து, இதில் நடந்துள்ள கையாடல்களை அறிந்து ரகு மீது காவல் வழக்குகள் பதியப்படுவதோடு, துறைரீதியான நடவடிக்கைகளும் மேற்கொள்ளப் பட வேண்டும்.

மேலும், இந்த RC குறித்த சர்ச்சையில் இந்த அருள் என்பவர் தான் பாலாஜியை கட்டையால் அடிக்க பாய்ந்தவர் என்பதோடு, இதன் தொடர்ச்சிதான் மறுநாள் ஏற்பட்ட அலுவலக சண்டை காட்சிகளில் துரதிர்ஷடமாக பாலாஜி முன்னிலைப்படுத்தப்பட்டார்.

அதேநேரத்தில், இந்த மூவர் கூட்டணிகளின் சாணக்கிய போர் தந்திரங்களை அறியாத பணி நீக்கம் செய்யப்பட்ட தாம்பரம் RTO அலுவலக பணியாளர்கள் சேற்றில் சிக்கிய பட்டாம்பூச்சியாய் பலியாகினர்.

இப்படி தனது சக பணியாளர்களையும், அதிகாரிகளையும், அரசு அதிகாரியான ரகு–வின் சகுனித்தானத்தால் பலரும் பாதிக்கப் பட்டுவிட்டனர். தண்டிக்கப்பட வேண்டியவர்கள் வெளியில் சுதந்திரமாய் அலைகின்றனர்.

அது ஒருபுறம் இருந்தாலும், கு.பா.வின் கோரிக்கைபடி சிபிசிஐடி விசாரிக்கும் பட்சத்திலோ, அதேபோல், அதிரடி அதிகாரியான நிர்மல்ராஜ் IAS அவர்கள், இன்னும் அழமான விசாரணையில் இறங்குகிறபட்சத்திலோ, பல்வேறு தகவல்களும் அந்த நேர்மையான IAS –யை அதிர்ச்சிக்குள்ளாக்கும் என்பதே நிதர்சனம்.

ஆக, விசாரணையை சிபிசிஐடி கையில் எடுத்தால், பல்வேறு பூகம்பங்களும், எரிமலையாய் வெடித்துக் கிளம்பும் என்பது மட்டும் நிச்சயம்.

அதிரடி காண்பாரா ஆணையர்? பொறுத்திருந்து பார்ப்போம்.

**நெல்லை கோபால்**
மூத்த பத்திரிகையாளர்
9994478389

26–08–2022